# கைவினைகள் மற்றும் கூடுதல்கள்
# கைவினைகள்

விசுவாசத்தின் கதாநாயகர்கள், பிரிவு 3

## திமிங்கலம்





### தேவையான பொருட்கள்

- வடிவம்
- மார்க்கர் / பேனா
- கத்தரிகோல்
- வண்ணங்கள்



### வழிமுறைகள்

1. திமிங்கல வடிவத்தின் துண்டுகளை வெட்டி எடுத்து, அவற்றிற்கு வண்ணம் தீட்டவும்.
2. வால் பகுதியின் முதல் துண்டை இரண்டாம் துண்டின் மேலே ஒட்டவும். அது காய்ந்ததும், இரண்டாம் துண்டின் முடிவில் இருக்கும் கோடிட்ட வரியோடு சேர்த்து மேல்புறமாக மடித்துவிடவும். திமிங்கலத்தின் வளைக்கப்பட்ட மேற்புறத்தை கொடுக்கும் பொருட்டு, முதல் துண்டின் இறுதியை இரண்டாம் துண்டின் மடிக்கப்பட்ட பகுதியில் ஒட்டவும்.
3. மூன்றாம் துண்டு வாய். திமிங்கலத்தின் மேலே இருக்கக்கூடிய பற்கள் போன்ற அமைப்பை (பற்கள்) வரைந்து அதனை திமிங்கலத்தின் முன்புறமாக ஒட்டவும். வாயிற்கு மேலே கண்களை ஒட்டி அதன் கருவிழிகளை வரையவும்.
4. ஐந்தாம் துண்டில், அனைத்து வரிகளையும் ஒரு பக்கமாக வெட்டி எடுக்கவும். அது நிறைவுற்றதும், திமிங்கலத்தின் மேல்புறத்தில் இருக்கும் காற்றுத்துளை பகுதியிலிருந்து தண்ணீர் ஸ்பிரே ஆவதைப் போல காட்ட, காகிதத்தை சுருட்டி அதனை திமிங்கலத்தின் மேல் பக்கத்தில் ஒட்டவும்.
5. கைவினையை நிறைவுசெய்ய, வாலின் துடுப்பில் சில வரிகளை வரையவும்.

## நதியில் நாமன்





### தேவையான பொருட்கள்

- நீலவண்ண நுறை போன்ற அல்லது வெள்ளை அல்லது வண்ண காகிதம்
- மர பாப்சிகிள் குச்சி

- தொழுநோய் இருப்பதும் மற்றும் இல்லாததும் போன்ற நாமனின் படம்
- வண்ணங்கள்
- கத்தரிக்கோல்
- பசை

### வழிமுறைகள்

1. துண்டுகளை வெட்டி எடுக்கவும்: ஒவ்வொரு குழந்தைக்கும் 3 அலைகள் மற்றும் 2 நாமன் காகிதங்கள், தொழுநோய் இருக்குமாறு ஒன்று மற்றும் இல்லாதவாறு மற்றொன்று.
2. அலைகள் வெள்ளை வண்ணத்தில் இருந்தால், அவற்றிற்கு தண்ணீரின் நிறத்தை வண்ணம் தீட்டவும். அலைகளை ஒன்றிணைத்து பசைபோட்டு ஒட்டவும். ஒரு காகிதத்தில் அலைகளின் மேல் புறத்தில் மட்டும் பசையை போடவும். அவற்றை மற்றொரு அலையின் நேர்மூலையில் ஒட்டவும், மூன்று அலைகளும் ஒன்றன் மேல் ஒன்று அடுக்கப்படும்வரை இதனை செய்யவும். பிறகு இதனை காய விடவும்.
3. இது காய்ந்ததும், இரு பக்கங்களையும் ஒன்றிணைத்து ஒட்டி ஒரு குழாய் போல உருவாக்கவும்.
4. நாமனின் இரு துண்டுகளிலும் வண்ணம் தீட்டவும். நாமன், தன் முகத்தைக் கீழ் நோக்கி வைத்தவாறு ஒன்றை மேசையின் மேலே வைக்கவும், அதனோடு ஒரு குச்சியை பசைபோட்டு ஒட்டவும். நாமனின் மற்றொரு துண்டை எடுத்து அதனை குச்சியின் மேல்புறத்தில் ஒட்டவும், எனவே அது முதல் துண்டோடு ஒட்டி இணைந்திடும்.
5. கைவினையோடு விளையாட, நாமனை தண்ணீருக்கு மேல் வைத்தவாறு உள்ளே குச்சியை பிடித்துக்கொள்ளவும். முதலில் அவர் தொழுநோயுடன் தொடங்குகிறார், அதன்பின் 7 முறை தண்ணீருக்குள் முக்கி எடுத்த பிறகு, அவர் சுத்தமாகிறார்!

## சிங்கப் புத்தகக்குறி

### தேவையான பொருட்கள்



- வெட்டுவதற்கான வரிகளைக் கொண்ட காகிதத்தின் வட்ட வடிவம்
- இரண்டு சிறிய அசையும் கண்கள்
- பிளாஸ்டிக் ஸ்பூன் அல்லது பாப்சிகிள் குச்சி
- மார்க்கர் / பேனா
- பசை

- வண்ணங்கள்

**வழிமுறைகள்**

1. வட்டத்திற்கு வண்ணம் தீட்டி, அதனூடாக ஸ்பூன் அல்லது குச்சி நுழைந்து செல்லுமாறு வட்டத்திற்கு உள்ளே ஒரு வரியை பிளவு போல ஏற்படுத்தவும். ஓரத்தின் அருகே விளிம்பை ஏற்படுத்த வரிகளை வெட்டவும். வட்டத்தின் உள்ளே அவ்வழியே அனைத்தையும் வெட்டி விடாமல் இருப்பதில் கவனமாக இருங்கள்.
2. அதன் நடுவில் இருக்கும் பிளவின் வழியாக ஸ்பூன் அல்லது குச்சியை நுழைத்து ஒட்டவும்.
3. கண்களை பசை கொண்டு ஒட்டவும், பிறகு மார்க்கர் கொண்டு மூக்கு மற்றும் வாயை வரையவும். அசையும் கண்களை பயன்படுத்துவதற்கு மாறாக நீங்கள் கண்களை வரைந்து கொள்ளலாம்.
4. இப்போது உங்களது புத்தகக்குறி தயார்!